தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 74, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

74—

பல அடுக்கு வாகன நிறுத்தம்

***3098—திரு. ப. சத்திய நாராயணன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தியாகராய நகர் பகுதியில் பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சிவஞானம் தெருவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அடித்தளம், தரைத்தளம் மற்றும் ஆறு தளங்கள் கொண்ட பல அடுக்கு வாகன நிறுத்தம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 17]

திரு. ப. சத்திய நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வறியா மனம் தரும், தெய்வ வடிவம் தரும், (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சில் வஞ்சமில்லா மனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவருக்கே கனம் தரும் பூங்குழலாள் அபிராமியின் கடைக்கண்களே என்று இவ்வவையில் முழுமுதல் நாயகமாக என்றும் தனக்கே உரித்தான அடக்கத்துடன்கூடிய கம்பீரத்தோடு வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கும் கோடி மலர்களில் ஒருவனாய் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிக மக்கள் கூடும் வணிகப் பகுதியான தி.நகர் பகுதிக்குட்பட்ட வடக்கு உஸ்மான் சாலையில் வணிக வளாகங்கள் அதிகமாக உள்ளபடியால், இப்பகுதி, பல இடங்களிலிருந்து தினசரி பல இலட்சம் மக்கள் வந்து செல்லும் முக்கிய இடமாகும். மேலும், இப்பகுதியிலுள்ள வார்டு 136 மற்றும் 141 ஆகியவற்றில் சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேலான குடியிருப்புவாசிகள் உள்ள நடேசன் தெரு, ரெங்கநாதன் தெரு, இராமகிருஷ்ணன் தெரு, ராமன் தெரு, ரங்கூன் தெரு, மங்கையர் தெரு, சுப்பிரமணி தெரு, வெங்கடேசன் தெரு, இராமசாமி தெரு, சரோஜினி தெரு, மோதிலால் தெரு, மகாலட்சுமி தெரு ஆகிய பல தெருக்களில் வணிக வளாகங்களுக்கு வருபவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு இடமில்லாமல் இந்தக் குடியிருப்புப் பகுதிகளில் தங்களின் கார்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை நிறுத்திவிட்டுச் சென்று விடுகின்றனர். அதனால், இப்பகுதியில் வசிப்பவர்கள் சொல்ல முடியாத துயரத்திற்கு ஆளாகி, அவசரமாக மருத்துவமனைக்கோ அல்லது வேறு முக்கிய பணிகளுக்கோ செல்ல நேரிடும்பொழுது மிகவும் அவதிப்படுகிறார்கள். வடக்கு உஸ்மான் சாலையில் அதிக மக்கள் நடமாட்டமுள்ள ரெங்கநாதன் தெருவின் இணைப்பில் கட்டப்பட்ட மேம்பாலத்தின் இறக்கத்தை முடித்துவிட்டார்கள். ரெங்கநாதன் தெருவிற்குச் செல்லும்போது, மக்கள் வடக்கு உஸ்மான் சாலையைக் கடப்பதால், இப்பாலத்தின் வழியே வரும் வாகனங்கள் செல்ல முடியாமல் பாலம் முழுவதும் தொடர்ச்சியாக வாகனங்கள் நின்று விடுகின்றன. இதனால் இந்தப் பாலம் பயனற்ற நிலையில் உள்ளது. இவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி

அம்மா அவர்களின் தலைமையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க மக்கள் நல அரசு துரித நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள சிவஞானம் தெருவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, ஆறு தளங்களில் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் கட்டடம் கட்ட 24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 26—2—2014 அன்று சென்னைப் பெருநகர் மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொது—தனியார் பங்களிப்பு முறையில் 7,040 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட பல அடுக்கு வாகன நிறுத்துமிடத்தை அமைக்கும் திட்டத்தின் செயற்குறிப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தத் திட்டம் கண்டிப்பாக செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சத்திய நாராயணன் அவர்கள்.

திரு. ப. சத்திய நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையின்கீழ் நடைபெறும் நல்லாட்சியில் அங்கம் வகிக்கும் மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் தியாகராய நகர் பகுதியில் வாழும் பொதுமக்களுக்கு மாண்புமிகு அம்மா

அவர்களின் பொற்கால ஆட்சியில் கிடைத்த மாபெரும் நற்செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு, தியாகராய நகர் பகுதிவாழ் மக்கள் சார்பாக எனது நன்றியை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மதுரை, கோயம்புத்தூர் அதேபோல, ஆன்மிக நகரங்களில் ஒன்றான திருவண்ணாமலை போன்ற நகரங்களில் வாகனங்களை நிறுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான காலி இடங்களில் இப்போது நவீன முறையிலே வாகனங்கள் நிறுத்தம் அமைக்கப்படுமா? வாகனங்கள் விற்கப்படுகின்ற* Show Rooms–*ல் நவீன முறையில் அவையெல்லாம் அமைக்கப்படுமா? வாகன நிறுத்தங்களை கட்டடம்போல் கட்டாமல், தேவையான இடங்களிலே, நவீனமான முறையில் வாகன நிறுத்தும் இடங்களை அமைக்க அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர மாநகராட்சியில், நுங்கம்பாக்கம், வால்ஸ் கார்டன் முதல் தெருவில், திருவாளர்கள் மார்க் லிமிடெட் மற்றும் அப்போலோ மருத்துவமனைக் குழுமத்தால் இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில், வடிவமைக்கப்பட்ட அடுக்குமாடி வாகன நிறுத்துமிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் 15–9–2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்த வாகன நிறுத்துமிடத்தில் 249 நான்கு சக்கர வாகனங்களும், 230 இரண்டு சக்கர வாகனங்களும் நிறுத்தும் வசதியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.*

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூரில் வாகன நிறுத்துமிடம் அமைக்கக் கேட்டுக்கொண்டார். அங்கே இருக்கக்கூடிய

வாகனங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், அங்கிருக்கக்கூடிய வியாபாரத் தளம் போன்றவற்றின் சூழ்நிலையைப் பொறுத்தும்— main ஆக இடம் தான் முக்கியம்—இடம் இருக்கும்பட்சத்தில், வாகன நிறுத்துமிடம் அமைக்கப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவை மாவட்டத்தில் வாகன நிறுத்துமிடம் அமைப்பது குறித்தும் கேட்டார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டு, கோவை மாவட்டத்தில் மூன்று வாகன நிறுத்துமிடங்கள் Multi Level Car Parkings அமைக்க இன்றைக்கு டெண்டர் விடப்படும் நிலையில் இருக்கிறது. அதேபோல, திருவண்ணாமலை போன்ற இடங்களில் எந்தெந்த இடங்களில் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் அவர்கள்.

திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் வியாபாரம் நிறைந்த நகரம். இங்கு தினந்தோறும் வெளி மாநிலங்களிலிருந்தும், வெளி மாவட்டங்களிலிருந்தும் சரக்குகளை ஏற்றி வருகின்ற லாரிகளிலிருந்து சரக்குகளை இறக்கியபின், விருதுநகரில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்றுவதற்காக லாரிகளை தெரு ஓரங்களிலும், சாலையோரங்களிலும் நிறுத்திவிடுகின்றனர். லாரிகளை அப்படி அவர்கள் நிறுத்திவிடுவதால் மற்ற பள்ளி வாகனங்கள் செல்வதற்கும், பாதசாரிகள் நடந்து செல்வதற்கும் இடையூறாக உள்ளது. எனவே, சாலைகளின் ஓரங்களில் லாரிகளை நிறுத்துவதற்கு வசதியாக நகராட்சியின் சார்பாக ஒரு லாரி பேட்டை அமைத்துத்தர அரசு முன்வருமா எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டது மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்றாலும்கூட, வாகனங்கள் நெரிசல் ஏற்படுவதால் விருதுநகரில் லாரி பேட்டை ஒன்றை நகராட்சிமூலம் அமைக்கக் கேட்டார். அங்கே இடம் இருக்கின்றபட்சத்தில், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, அவசியம் இருப்பின் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

மீன்பிடித் துறைமுகம்

***1535—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மரக்காணம் பகுதியிலுள்ள கடற்கரையில் புதிய மீன்பிடித் துறைமுகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட மரக்காணம் பகுதியில் எக்கியார்குப்பம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு மீன் இறங்குதளம் அமைக்கப்பட்டு, மீனவர்களின் பயன்பாட்டில் உள்ளது. மரக்காணம் பகுதி சார்ந்த கிராமங்களில் உள்ள பெரும்பான்மையான மீனவர்கள் கரையேற்றும் நாட்டுப் படகுகளைக் கொண்டுதான் மீன் பிடித்து வருகின்றனர். மேலும், இப்பகுதியில் 14 விசைப் படகுகள் மட்டுமே உள்ளன. எனவே,